**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 29 July 2015

# நாட்டின் ‘முதல் பெண் பிரதமரான’ பிரேமிக்கா



“ உரைக்குப் பின் எதிர்க் கட்சியினரின் கேள்விகளுக்கு யோசித்துப் பதிலளிக்க போதிய நேரம் இல்லாதது ஒரு பெரிய சவாலாக இருந்தது.

**பிரேமிக்கா மாடசாமி**

மாதிரி நாடாளுமன்றத்தில் உரையாற்றும் பிரேமிக்கா (வலது). **படம்: சிங்கப்பூர் மாதிரி நாடாளுமன்றம்**

இவ்வாண்டு சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக அரசியல் அறிவியல் சங்கம் ஏற்பாடு செய்த மாதிரி நாடாளுமன்றத்தின் பிரதமராக பதவி ஏற்றார் பிரேமிக்கா மாடசாமி. தேசிய பல்கலைக்கழகத்தில் இரண்டாம் ஆண்டு மருத்துவ மாணவி இவர்.

‘ரீச்’ எனப்படும் அரசாங்கக் கருத்துச் சேகரிப்புப் பிரிவு நான்காவது முறையாக நடத்திய சிங்கப்பூர் மாதிரி நாடாளுமன்றத்தில், முதன் முறையாகப் பங்கெடுத்த அவருக்கு சவால்மிக்க பிரதமர் பதவி வழங்கப்பட்டது.

“மாதிரி பிரதமராக, மற்ற அமைச்சுகள் தொடர்பான விவரங்களை உலகளாவிய பார்வையுடன் நன்கு அறிந்து, நான் செயல்பட வேண்டியிருந்தது. இந்த அனுபவம் எனக்கு விழிப்புணர்வுமிக்கதாக அமைந்தது,” என்ற பிரேமிக்கா அந்த அனுபவத்தை விவரித்தார்.

“நாடாளுமன்றத்தில் நடக்கும் கலந்துரையாடல்கள், அதன் விதிமுறைகள் நடைமுறைகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளும் தளமாக அமைவது மட்டுமில்லாமல் நம் நாட்டை ஒட்டிய நடப்புகளையும் நன்கு அலசி ஆராயவும் இந்த மாதிரி நாடாளுமன்றம் உதவுகிறது.

“மேலும், மாதிரி நாடாளுமன்றத்தில் பங்கெடுத்த பெரும்பாலானோர் சட்டக் கல்வி அல்லது அரசியல் சம்பந்தப்பட்ட துறையில் பயிலும் மாணவர்கள் என்பதால், மருத்துவம் படிக்கும் எனக்குச் சில பல கோட்பாடுகள் தெரியாதது சவாலை இன்னும் கடுமையாக்கியது.

“மத்திய சேம நிதி திட்டத்திலிருந்து வெளியாகும் உரிமை, இறுதிக் காலம் வரை நோயால் அவதிப்படும் நோயாளிகளுக்குச் செயற்கை முறையில் இறப்பு, மற்ற இனத்தைச் சேர்ந்தவர்களை வார்த்தைகளால் அவமதிப்பவர்களுக்குக் கூடுதல் தண்டனை போன்ற விஷயங்களைப் பற்றி அனைவரும் நாடாளுமன்ற கூட்டத்தில் பேசினார்கள்.

“அதுமட்டுமல்லாமல், நம் அரசாங்கம் ஒரு புதுத் திட்டத்தை அமல்படுத்தும்போது, அதன் நோக்கத்தை உணர்ந்துகொள்ளாமல் தவறாக விமர்சிப்பதைத் தவிர்க்கவேண்டும் என்பதையும் இதன்மூலம் கற்றுக்கொண்டேன்,” என்றார் பிரேமிக்கா.

“நேர்முகத்தேர்வில் பிரேமிக்கா ஒரு பிரதமருக்கு தேவையான தகுதிகளை வெளிப்படுத்தினார். அவருடைய சமூக ஈடுபாடு எங்களை மிகவும் கவர்ந்தது. கட்சியில் மற்ற உறுப்பினர்களிடம் பழகுவது, அவர்களை வழிநடத்துவது என அவருடைய தலைமைத்துவ பண்புகளைச் சிறப்பாகச் செயல்படுத்தினார்,” என்று கூறினார் தேசிய பல்கலைக்கழக அரசியல் அறிவியல் சங்கத்தின் தலைவர் திரு கிரிஸ் சியா.

செய்தி: வனிதா மணியரசு

Source:Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.